**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்-நாராயணசாமி**

**தேதி 26.8.2024** **நேரம் மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

**நாடு முழுவதும் இன்று கிருஷ்ண ஜெயந்தி விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.**

**இந்தியா-சிங்கப்பூர் இடையே, அமைச்சர்கள் நிலையிலான வட்ட மேஜை மாநாடு இன்று சிங்கப்பூரில் நடைபெற்றது**

**இந்தியாவின் GEM, UPI, மற்றும் ULI ஆகிய புதிய டிஜிட்டல் பண பரிவர்த்தனை திட்டங்கள் நாட்டின் புரட்சிகரமான முன்னேற்றத்தை பிரதிபலிப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.**

**சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 6 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் இன்று அடிக்கல் நாட்டினார்.**

**---------------------------**

கிருஷ்ணர ஜெயந்தி 1(15)

நாடு முழுவதும் இன்று கிருஷ்ண ஜெயந்தி விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் உள்ள கோவில்களில் கிருஷ்ணரை பக்தர்கள் வழிபட்டனர். ஜென்மாஷ்டமியை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜம்மு காஷ்மீர்துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

கிருஷ்ணர் பிறந்த இடமான மதுராவில் நேற்று முதல் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை புரிந்து ஜென்மாஷ்டமியை கொண்டாடி வருகின்றனர். உத்திரபிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் மதுராவில் உள்ள கிருஷ்ணர் கோவிலில் இன்று காலை வழிபாடு செய்து, கோவில் வளாகத்தில் மரக்கன்று நட்டார். மேலும், இந்த புனித பூமியில், மதம், உண்மை மற்றும் நீதியை நிலை நாட்டியவர் கிருஷ்ணர் என்றும், கிருஷ்ணர் காட்டிய வழியை பின்பற்றி வளர்ச்சியடைந்த இந்தியாவின் தொலைநோக்கு பார்வையை நனவாக்க வேண்டும் என்றும் நாட்டு மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

---------------------------

குஜராத் மாநிலம் துவாரகாவில் உள்ள துவாரகேஷ் கோவில், டஹோர்-ரில் உள்ள ஸ்ரீ ராஜ்சோத்ராய் ஜி கோவில், உத்திரபிரதேசத்தின் பிரஜ் பகுதியில் உள்ள கோவில்களிலும், இந்த விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதேபோல் தமிழ்நாட்டில் கிருஷ்ணர் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் இன்று நடைபெற்றன. விழுப்புரம் மாவட்டம் மருதூர் கிருஷ்ணர் கோவில், நெல்லை அருகன்குளம் ஸ்ரீ கோபாலகிருஷ்ணர் கோவில், ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் சுவாமி கோவில் உள்ளிட்ட பல்வேறு கிருஷ்ணர் கோவில்களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

----------------------------

*சிங்கப்பூர் மாநாடு* 1 (17)

இந்தியா-சிங்கப்பூர் இடையிலான வர்த்தகம், பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் வகையில், அமைச்சர்கள் நிலையிலான வட்ட மேஜை மாநாடு இன்று நடைபெற்றது. இரு நாடுகளுக்குமான கூட்டாண்மை, மதிப்பாய்வு ஆகியவற்றை விரிவுபடுத்த புதிய வழிகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. மேலும், டிஜிட்டல் இணைப்பு, ஃபின்டெக் பசுமை பொருளாதாரம், பசுமை ஹைட்ரஜன், திறன் மேம்பாடு மற்றும் உணவு பாதுகாப்பு ஆகியவை குறித்து ஆய்வு

**செய்யப்பட்டது. மாநாட்டில் வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், சிங்கப்பூர் துணை பிரதமர் திரு கான் கிம் யாங் தலைமையில் அந்நாட்டு பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்தியாவிற்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான உறவுகளின் 60 ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடுவதற்கான திட்டங்கள் குறித்தும் ஆசியான் மற்றும் ஜி 20 வளர்ச்சிகள் உட்பட பிராந்திய மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு குறித்தும் இம்மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது.**

**---------------------------**

*சிங்கப்பூர் மாநாடு* 2 (15)

**முன்னதாக, சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முகரத்தினம் மற்றும் அந்நாட்டு பிரதமர் திரு லாரன்ஸ் வாங்க் ஆகியோரை மத்திய அமைச்சர்கள் இன்று சந்தித்து உரையாடினர். அப்போது, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோரின் வாழ்த்துக்களை மத்திய அமைச்சர்கள் சிங்கப்பூர் அதிபரிடம்**

**தெரிவித்தனர். இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டாண்மையை மேலும் முன்னெடுத்து செல்வதற்கான வழிகளில் சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முக ரத்தினத்தின் வழிகாட்டுதலை இந்தியா மதிப்பதாக மத்திய அமைச்சர்கள் தெரிவித்தனர். இந்த அமைச்சர்கள் வட்டமேஜை மாநாட்டில் சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வாங்கி-ன் தொடர்ச்சியான ஈடுபாட்டை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பாராட்டினார். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அமைச்சர்கள் தத்தம் துறை சார்ந்த அந்நாட்டு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள உள்ளனர். அமைச்சர்கள் அளவிலான முதல் வட்டமேஜை மாநாடு 2022 -ம் ஆண்டு செப்டம்பர் மாதம் புதுடெல்லியில் தொடங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.**

**----------------------------**

*ரிசர்வ் வங்கி* (13)

**இந்தியாவின் GEM, UPI, மற்றும் ULI ஆகிய புதிய டிஜிட்டல் பண பரிவர்த்தனை திட்டங்கள் நாட்டின் புரட்சிகரமான முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்ததாஸ் கூறியுள்ளார். ரிசர்வ் வங்கியால் ஊக்குவிக்கப்பட்ட யூஎல்ஐ தொழில்நுட்பத் தளம் இந்தியாவில் தடையில்லா பண பரிவர்த்தனைக்கு**

பயனளிப்பதாக கூறினார். யுபிஐ முறை பண பரிவர்த்தனைகளை மிகவும் இலகுவாக்கி உள்ளதாகவும், இந்த பண பரிவர்த்தனை முறைகளால் ரிசர்வ் வங்கி தற்போது ஒருங்கிணைந்த கடன் வழங்கும் திட்டத்திற்கு தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். தற்போதைய மின்னனு பண பரிமாற்ற சூழல்கள் விரைவாகவும், அதே வேளையில் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். யுஎல்ஐ பண பரிவர்த்தனை முறை கடந்த ஆண்டு தொடங்கப்பட்டதாகவும், இது விரைவில் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

---------------------------

*அமித் ஷா* (11)

லடாக் யூனியன் பிரதேசத்தில் ஜான்ஸ்கர், திராஸ், ஷாம், நுப்ரா மற்றும் சாங்தாத் ஆகிய 5 புதிய மாவட்டங்களை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின் படி, லடாக் யூனியன் பிரதேசத்தில் 5 மாவட்டங்களை உருவாக்கி, வளர்ந்த மற்றும் வளமான லடாக்கை உருவாக்க திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதன் மூலம் லடாக் மக்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் அவர்

**கூறினார். புதிய மாவட்டங்களில் நிர்வாகத்தை வலுப்படுத்தவதன் மூலம் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்களை அவர்களின் வீட்டு வாசலுக்கே கொண்டு செல்லும் என்றும் அவர் உறுதி அளித்தார்.**

---------------------------

*சிலை மாலை* (9)

**பாரத ரத்னா அன்னை தெரேசாவின் பிறந்த நாளை ஒட்டி, சட்டப்பேரவை அருகே உள்ள அவரது திரு உருவ சிலைக்கு அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜெ சரவணன்குமார், சட்டப்பேரவை துணை தலைவர் திரு ராஜவேலு, அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கேஎஸ்பி ரமேஷ், திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அன்னை தெரேசாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**

---------------------------

ஜிதேந்திர சிங் (11)

**பிரதமர் திரு நரேந்திர மோடி அறிமுகப்படுத்திய புதிய பயோ இ 3, கொள்கை வரும் ஆண்டுகளில் இந்தியாவை தலைசிறந்த நாடாக உயர்த்தும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிய உயிரி பொருளாதார கொள்கை குறித்து உரையாற்றிய அவர், நாட்டின் உயிரி பொருளாதாரம் 2014 ல் 10 பில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து, 2024 ல் 130 பில்லியன் அமெரிக்க டாலர்களாக வளர்ச்சி அடைந்துள்ளதாக குறிப்பிட்டார். பருவ நிலை மாற்றம் மற்றும் புதுப்பிக்க வல்ல வளங்களை காக்கும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்த புதிய உயிரி இ-3 கொள்கை வடிவமைக்கப் பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.**

**----------------------------**

ஜம்மு காஷ்மீர் (7)

**ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் 16 வேட்பாளர்களின் பட்டியலை பாஜக இன்று வெளியிட்டது. பாம்போரை சேர்ந்த சையத் ஷோகத் கயூர் அந்த்ராபி, ஷோபியானை சேர்ந்த ஜாவேத் அகமத் காத்ரி, அனந்த்நாத்தை சேர்ந்த வழக்கறிஞர் சையத் வசாஹத்**

உள்ளிட்ட பல்வேறு வேட்பாளர்களை பாஜக அறிவித்துள்ளது. 90 தொகுதிகளை கொண்ட ஜம்மு காஷ்மீரில் வரும் 18 ஆம் தேதி தொடங்கி 3 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது.

-----------------------------

தமிழ்நாடு (12)

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 115 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பிலான 6 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் இன்று அடிக்கல் நாட்டினார். மேலும், 5 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பிலான 4 முடிவுற்ற பணிகளையும் அவர் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். கொளத்தூர் பகுதியில் சர்வதேச தரத்திலான வண்ண மீன் சந்தை, ராயபுரத்தில் புதிய சமுதாய நலக் கூடம், புரசைவாக்கத்தில் நவீன சலவைக் கூடம், புழல் பகுதியில் ஏரிக்கரைகளை மேம்படுத்துதல், அயனாவரத்தில் நவீன சலவைக் கூடம் மற்றும் நியாய விலைக்கடைகள் உள்ளிட்டவற்றையும் அவர் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு பொன்முடி, திரு சேகர் பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

-----------------------------

விளையாட்டு (13)

**யூ.எஸ் ஓபன் கிரண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள் நியூயார்கில் இன்று தொடங்குகின்றன. வரும் 8 ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப் போட்டிகளில் இந்தியாவின் சுமித் நாகல், ரோகன் போபண்ணா, யூக்கி பாம்ப்ரி, ஸ்ரீராம் பாலாஜி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். இந்த ஆண்டின் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் பங்கேற்றும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையை சுமித் நாகல் பெற இருப்பது குறிப்பிடத் தக்கது.**

**பாரீஸ் பாரலிம்பிக்ஸ் போட்டிகள் நாளை மறுநாள் தொடங்குகின்றன. அடுத்த மாதம் 8 ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டிகளில் இந்தியா சார்பில் 84 வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். தமிழ்நாட்டில் இருந்து 6 பேர் கலந்து கொள்ள உள்ளனர். இந்திய அணி வில்வித்தை, தடகளம், பேட்மிண்டன், சைக்கிளிங், ஜூடோ, பளு தூக்குதல், துப்பாக்கி சுடுதல், நீச்சல், டேபிள் டென்னிஸ், தேக்வாண்டோ உள்ளிட்ட 12 விளையாட்டுகளில் பங்கேற்கிறது.**

-----------------------------

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

நாடு முழுவதும் இன்று கிருஷ்ண ஜெயந்தி விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியா-சிங்கப்பூர் இடையே, அமைச்சர்கள் நிலையிலான வட்ட மேஜை மாநாடு இன்று சிங்கப்பூரில் நடைபெற்றது

இந்தியாவின் GEM, UPI, மற்றும் ULI ஆகிய புதிய டிஜிட்டல் பண பரிவர்த்தனை திட்டங்கள் நாட்டின் புரட்சிகரமான முன்னேற்றத்தை பிரதிபலிப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 6 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் இன்று அடிக்கல் நாட்டினார்.

---------------------------